உ

முருகன் துணை.

172



# ஸ்ரீமுருகக் கடவுள் பேரில்

## தை பூச மகோற்சவ சிந்தும்,

நாட்டரசன்கோட்டையில் திருக்கோவில்
கொண்டெழுந்தருளியிருக்கும்

## கண்ணுடையம்மன்

வைகாசி திருநாள் காட்சியும்.

இஃது

தென்னிந்தியா இராமநாட் ஜில்லா
குருவாடி கிராமம், மகா-ள-ள-ஸ்ரீ

**சா. ஓ. அரசு அவர்களாலியற்றியதை**

விருதுநகர் மகா-ள-ள-ஸ்ரீ
வெள்ளைச்சாமிதாஸ் அவர்களால் பார்வையிட்டு,

நல்லமநாயக்கம்பட்டி மகா-ள-ள-ஸ்ரீ
எ. ராமசாமி நாயக்கர் அவர்களால்

அருப்புக்கோட்டை,
அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

1932 [அணா 1

Q26:417
M32
18382

உ

முருகன் துணை.



172

# ஸ்ரீமுருகக் கடவுள் பேரில்

தை பூச மகோற்சவ சிந்தும்,

நாட்டரசன்கோட்டையில் திருக்கோவில்
கொண்டெழுந்தருளியிருக்கும்

## கண்ணுடையம்மன்

வைகாசி திருநாள் காட்சியும்.

இஃது

தென்னிந்தியா இராமநாட் ஜில்லா
குருவாடி கிராமம், மகா-ள-ள-ஸ்ரீ

**சா. ஒ. அரசு அவர்களாலியற்றியதை**

விருதுநகர் மகா-ள-ள-ஸ்ரீ
வெள்ளைச்சாமிதாஸ் அவர்களால் பார்வையிட்டு,

நல்லமநாயக்கம்பட்டி மகா-ள-ள-ஸ்ரீ
எ. ராமசாமி நாயக்கர் அவர்களால்

அருப்புக்கோட்டை,
அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை] 1932 [அணா 1

உ

முருகன் துணை

குருவாடிபட்டி கிராமத்தில் அமர்ந்திருக்கும் விக்நேஸ்வரர் பேரில்

## வெண்பா.

பேரும் பெரும் புகழும் பெற்ற குருவாடிநகர்
பாரிலுதித்த வுமைபாலகனே—சீரியநல்
வரக்கருள்வாய் காப்பாய் வரமருள்வாய் நின்கழலை
நீக்கமறக் கொள்வே னிதம்.

## துலங்குசெம்பொன்–என்றமெட்டு

சங்கீர்தமேளம் தாம்தாமெனவே
பொங்கிடும் பரங்கிரிதனிலுயர் வாழ்வே
போற்றினேனுந்தன் கழலே புவிதனிலே
யேற்றினேன் பெரும்புகழே

(2) மண்டலவிண்டல எண்திசையோர்களும்
தொண்டுசெய்பணியுடன் பண்டுபுகழ்ந்திடும்
குன்றைநகரில் வாழ்வோனேமன்ருடினேனே
ஆண்டிடுவாய் நீகுகனே

(3) தண்டையுஞ் சலங்கைசலசலவெனவே
மன்றுளாடிய யென்றழியாப்பொருளின்
மாதவத்திலுற்ற அருளே
பாலன் அரசு பாடவரந்தாபொருளே

---

## இனிப்போத மருள்வாய்–என்றமெட்டு

இனிதாமதஞ்செய்யாய் ஏழைக்கிரங்க
அநுதினமுனதிருபதமே சதமெனநம்பினேன் (இனி)

சரணம்.

ஆவதுமழிவது முனையல்லால்வேறில்லை
ஆதரித்துனதருள் தருவதிலென்னதொல்லை
சேயன் அரசுசொல் செந்தமிழ்சொல்லை நேயமுடன்
கேட்டாதரிக்க வோர்துணையில்லை (இனி)

---

## கோருங்கள் கோருங்கள் கோருங்களே–என்றமெட்டு

செந்திலம் செந்திலம் செந்திலம்பதியின்
சீருஞ் சிறப்புமெடுத்தோதுவோன் சேரும்
தேவாதிதேவர்தொழும் பாவலர்கள்கீதம்பாடும் (செந்)

சரணம்.

எங்கெங்குசென்றாலும் நின்றிலங்குஞ்ஜோடி
தங்கமயமான காவடிகள்ஆடி
துங்கநாயகன்சங்கந்தனைநாடி
தேடிவருவார்கள்கோடானுகோடி

தும்புருநாரதர் சப்தம்முழங்கிடும்
யின்பவர்களெல்லாம் கண்டுமகிழ்ந்திடும்
தம்பிரான்சண்முகன் நாமம்துலங்கிடும்
அம்புவியோரெல்லாம் ஒன்றாககூடிடும் (செங்)

வள்ளி தெய்வானையின் வர்னவொய்யாரன்
புள்ளிமயிலேருமானந்த நீதன்
விள்ளும்அரசு செந்தமிழ்க்குபகாரன்
மேதினியோர்ம்கிழ் பூரணயோகன்வாழும் (செங்)

## குமரனே வுன்னருமைபேச—என்றமெட்டு

ஆறுமுகனேசண்முகா வேறுதுணையார்சொல்குகா
வாருமென்முன்னே தீரும்பழவினை
கோரும்வரமதை தாருமுருகோனே (ஆறு)

தொகையரா

அருகருவென தொனிமரைமுகா கொண்டாடி
அகிலமெலாம்புகழும் அன்னைவுமாபதியின் பாலனே

பாட்டு

அம்புவியோர் போற்றும்வேலா
நம்பினேனருள் வாய்வேலா
வம்புசெயதகாது சீலா
துன்பமுழுதகற்றும் பாலா

தொகையரா

எக்காலமெந்தனை தர்க்காக்கவருவாயோ
மூர்க்கரை கொன்றோனே
முருகனே மருகனே அமரர்துயர்தீர்த்தோனே

பாட்டு

முத்தமிழ்துலங்கும் பூமி
முன்னோர்சொல் பூமி
பக்தன் அரசுவின்மேமி பணிந்தேனே கந்தசாமி (ஆறு)

18382

## துடிக்குமயிலில் நடிக்கும்புண்யனே—என்றமெட்டு

குன்னக்குடி நகர் வாழுங்குமரனே கோறினேனுனே
கோதை வள்ளியின் மணாளனே

முடுக்கு

கோலாகலமயிலேறி யிதுதருகாலதாமதமினியிலாமலே
(2) வர்ணமயிலேரும் புண்யனே வானவர்போற்றும்
மர்மமாய் கையுடைய கண்யனே
வாருமென்கலிதிருமிபபோது வேறுசிந்தனைநேரிடாமலே
3) ஆதிமூலமான வேலனே பாலன்அரசு மீதுவுந்தன்
திருப்பதந்தானே
தவத்தருள் கோனேயிந்தவேளை நீனே சுந்தரனேவுந்தன்
சொந்தமைந்த நானே

---

## தங்க மகிமை வடிவேலா—என்ற மெட்டு.

(1) சிங்கார மயிலேறும் நீதா வுனை தேடினே நான்சமேதா
பாங்கான வள்ளியுடன் தோதாய் வந்தன் பச்சைமயிலேறிவ்
வேளை யெந்தன் முன்னே வாவாதா
(2) வீர ரசுரரை வென்றோனே
திருப்பரங்குன்றந் தனிலுயர்வோனே பாரினில்
பெண்மணங் கொண்டோனே மருகா
பாலன் அரசுவேளை அழைத்திட்டேன் நானே (சிங்)

---

## என்ன சிங்காரமே—என்ற மெட்டு.

1 பழனிமலை வாழ்வோனே பாலாயபிஷேக யோகனே

முடுக்கு

பணிந்தே னுனதிருபாதமதை எனக்கருள் துணிந்தேனென்
மனமினி யேனோ தாமதம் (பழனி)

சரணம்

2 சத்திவுமாபதியின் வித்தாய் முளைத்தவனே
முத்திநெறி யறிந்த பக்தர்களை காத்தவனே
ரக்ஷித்து யாழ்வாய் யெந்தனை பக்ஷத்துடனே (பழனி)
3 முத்தமிழ் செழிக்கும் ஞான
நித்ய பாண்டி பூமியான
செந்தமிழ் அரசுநானே தேடித்துதித்தேன் தினமே (பழனி)

---

## கணேசர் துதி.

காளை வாகனங் கொண்ட மேலவன் தவத்தாலுற்ற
பேழை வயிற்றோனே கரங்குவித்தேன்
கோலமாமயி லேறுங் குமரகுரு தேசிகன்மேல் பாடவரந்
பரசிவன் தன்மகனே துணை [தருவாய்

## ஆசிரிய விருத்தம்.

உமையவளிடமுற்ற இறைவன் விநாயகன் முருகன்
கலைவாணி மற்றுமுள தேவர்களின் கழலிணையை
போற்றிசெய்தேன் பாசமாய் என்குரு முத்தரசு அவர்களின்
பாதமலர் பணிந்தேன் போற்றி
வாகுடனே யிச்சிறுநூலை வெளியாக்கும் அன்பரையும் போற்றி செய்
மங்களமே எங்கும்புகழ் சிங்கார வேலவர்மேல் சிந்துதமிழ் [தேன்
பாடலானேன் ஆகையினுல் பிழை எனக்கிகலா வண்ணம்
பெரியோரை பணிவுடன் வேண்டினேனே.

---

## ஆனந்த களிப்பு.

1 சீரோங்குக் குன்னக்குடி வாழும் வேல் வேல்
சிங்கார வேல்முருகன் பேரிலெ யென்னாளும்

2 பாரினில்யான் சிறியன் பாட எங்கள்
பாரமத யானைமுகன் தன்னருள் தேட

3 கலைவாணியே யென்தன் நாவில் யிப்ப
கந்தன்மேல்பாட வரந்தருவாயே விரைவில்

4 சத்திசிவன் பெற்றதிருப் பாலா யிந்த
சத்தசாகரமெல்லாஞ் சுற்றியலோலா

5 விள்ளுங்கவி செந்தமிழின் குற்றம் பாலன்
அரசுபிழைதனை நீர் மன்னித்து நீக்கி

6 வந்தெனக்கு வரந்தருவாய் மருகா முன்பு
வானவரனை வோர்கள்துயர்தீர்த்த முருகா

7 எந்தவேளை காலமு நானே உன்மேல்
சிந்தனையாகவே துதிப்பதுதானே

8 கொஞ்சமேனும் நெஞ்சமதிலிலையா யிப்ப
தஞ்சமென வந்தோரை அஞ்சலிசெய்யமலையா

9 வர்ணமயி லேரும்வடிவேலா உனை
காட்டிடவே யான் பணிந்தேன் பாலன்வெகுநாளாய்

10 அம்புவியோர் புகழ்குன்றநீதா
நம்பினேனிதுதறி வந்தருள்வினோதா

11 முருகேசா வாவெனதுதித்து வுனக்கு
உகந்தவரிசை களெல்லாமடங்கலும் வைத்து
12 எங்குமே காவடிகள் ஆடி யின்று
எண்திசையோர்களு மொன்றுககூடி
13 வேல் வேல் எனச்சத்தம் போட்டு எங்கும்
பால்காவடி களுடன் வருகிறதை கேட்டு
14 வாட்டமுடனிருப்பதுவு மேனோ அந்த
வள்ளி தெய்வானையுட மர்மமோவறியேன்
15 புள்ளிமயிலேறிடுஞ் செருக்கா அல்லது
வள்ளி தெய்வானையுட ஞானக் கிருக்கா
16 பாதரக்ஷை பாதமதில் பூட்டி எங்கும்
மழனிமலைவேலா என்ற கீர்த்தனக்கோஷ்டி
17 அரூகரூ வெனச்சத்தம் வோங்க எந்தன்
ஆறுமுகன் வேலையிந்த பாமமதைதீர்க்க
18 வள்ளி தெய்வானையுடன் யிப்ப அந்த
வர்ணமயிலேறி வந்தருள்வாயே அப்பா
19 உனையல்லால் வேறுதுணையாரு யிந்த
வுலகத்தை ஒரு நொடியில் சுற்றியவாரு
20 பார்புகழும் பரமதயாளா பாலன்
பணிந்தேனு னதிருப்பதமே பாதுகார் லோலா
21 சொர்னமழை பொழிவது போலாய் சொந்த
மைந்தன் அரசுகவி பாடினேன் கேளாய்
22 பச்சைமயிலேறிவரும் முருகா என்னை
ரச்சித்து ஆள்வதுன்கடமையே மருகா

---

## கண்ணுடையம்மன் பேரில் கும்மி

1 சீருஞ்சிறப்புஞ் சிறந்து செழித்திடும்
நாட்டரசங்கோட்டை யென்றுபுகழும்
நன்னகரில்வாழும் கண்ணுடையம்மனை • மேல்
சோந்து கும்மிபாட்டுரைத்திடுவோம்
2 மங்களமாய்கும்மி பாட்டுரைக்க நல்ல
பிள்ளை கணேசர்துணை யிருக்க
வந்தருள்புரிய வேணுமம்மா எளியன்
வாழ்த்துங்கும்மிமாலை பூணுமம்மா
3 கோடானுகோடி ஜனங்கள் கொண்டாடி
தேடிமனமகிழ்ந் தாடிடவே
கோயிலின் வாசலில் அணியணியாய் ஜனம்
தோத்திரஞ்செய்வதை பாருங்களே

4 அஷ்ட ஐஸ்வரியமும் பெற்றிடுமேதன
வைசியருகிய செட்டியார்கள்
எல்லவரும் ஒற்றுமையாககூடியே
தேடி துதிக்குரு் மூன்ருடியே

5 செப்பிடுவோ மினி வெள்ளி ரதமகிமை
தப்பிதஞ் சற்றுமுணரும‌ல் யிதை
ஒப்பிட்ட சிற்ப சாஸ்திரியின் புத்தி
செப்ப நமக்கு தரமில்லையே

6 சுற்றிலுஞ் சித்திர விசித்திர தூண்களும்
பத்தி பத்தியாகவே அதன்
மத்தியில் பற்பல தங்கம் போலிழைத்திட்ட
முத்துகள் தொங்குது பாருங்களே

7 நால்புரமு மணிவோசை கலகலெனு
கேள்க்கின்ற சந்த மிதென்ன விந்தை
யித்தனை ஜோடிப்புஞ் சித்திரஞ் செய்திட
எத்தனை ஆயிரஞ் சென்றனவோ

8 ஜொலித்திடும் ரசகுண்டுகளோ வென்ருல்
ஜோதி மயமென ஒப்பிடலாம்
யேதுயிதனைப்போல் யெப்புவியிலுமில்லை
யென்றிவ்வாறின்ன முன்னுலேருவோம்

9 நாலுவேத மாறுசாஸ்திரமு மின்னும்
நன்னூ லிலக்கண லக்கியமும்
உண்மையுறு பதினெட்டு புருணமும்
கற்ற பெரியோர் பிழை பொருப்பீர்

10 சொற்பொருட் குற்றம் பலவிருக்கும்
அதை பிழையற பாடிட வேணுமென்று
உள்ள மகிழ்ந்து குருவாடி அரசு துதித்தேன்
செந்தமிழ் கோருங்களே.

## கண்ணுடையம்மன் பேரில் வழி நடைசிந்து.

1 ஏர்திழையேவருவாய் என்னுடன்
சிந்தை மிகமகிழ்ந்த புகழ்மிஞ்சிய
வைகாசித்திரு நாளைபார்த்திட போய்வருவோம்விரைவாய்
2 கொஞ்சவயதுள்ள கோதையரேயினி
அஞ்சாமலென்னுடன்வா நல்ல
மஞ்சளழகியே சஞ்சலமினிமேல் பஞ்சாய் பறந்திடும்பார்
3 கொஞ்சுங்கிளியே அருமை எந்தன்
கோதையரே கேளாய் உந்தன் மிஞ்சிரவிக்யைுடனே
புடவையை க்ஷணமணிந்து கொள்வாய்
4 எண்திசையோர் புகழ்
கண்ணுடையம்மன் வாழுஞ்சன்னதி நாடியேகி
வஞ்சிராம் செய்திட்ட பாவமகற்றிடகெஞ்சிடுவோம் வருவாய்
5 இந்தவுடம்பி னுயிரழிந்தாலினி
எங்குநாம் சென்றிடுவோம்பெரும்
பஞ்சமாபாதகஞ்செய்திருந்தாலுந் தொண்டு செய்வாயடியே
6 அன்னமே சன்னதி அதோயிருக்குது
யின்னமும்தாமதமேன் நல்ல
வர்னிக்கவொண்ணாத சொர்ணமயமுள்ள வெள்ளிரதம் பாராய்
7 எங்கிலு மோட்டார்கள் சங்கிலிபின்னலக்குள்
தங்கிடப்பதைப்பார் யிங்கே
மங்கள சங்கீதகச்சேரி பார்த்துமாதே மகிழ்ந்திடுவாய்
8 வாகான வாழை பழமுந்தேங்காயும்
பாங்குடனேபத்தியும் நல்ல வெற்றிலே பாக்குடன்
சாம்பிராணியும் வாங்கிசுற்றியே ஏந்திக்கொள்வாய்
9 பாங்கியே நாமொரு புரமாகவொதுங்கி
பதுங்கி சன்னதிக் குள்ளேவந்து பக்தியாயர்ச்சனே
செய்துகொண்டோமிங்கே தேன்மொழியாளே நில்லே
10 வருவாயடி மயிலே எந்தன்பின்
சார்ந்தேபெண்ணேயடுத்து அடிதங்கமே
நூற்றுக்கால் மண்டபத்தின் பெருமை நங்கையேபார்த்திடுவாய்
11 இத்தனைநேரமு மெந்தனுக்கு அம்மன்
சித்தையெடுத்துவுரைத் தோரே உந்தனின்
ஊரின்பேர் எந்தனிடஞ் சற்றெடுத்தோதுவீர் நல்ல வுத்தமரே
12 சிந்தைமகிழ்ந்திட்டேன் தேன்மொழியாளே என்
ஊரின்பேர் குருவாடி நகர் சாவன்ன ஓனுவின்
நற்றவ தந்த ... மைந்தன் அமக கஸிராசன் என்பேரே

முற்றுப்பெற்றது.



அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸ்,
காசுக் கடை பஜார்,
அருப்புக்கோட்டை.